STC.No.364/2022 Date:21.06.2023

Page No.77/2022

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறது.

**<u>பு.த.சா.1 சண்முகம், த /பெ சொக்கலிங்கம், வயது.56</u>**

## <u>குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.–</u>

குற்றம் சாட்டப்பட்டவர் மீது மாண்புமிகு கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்திலும், மாண்புமிகு சார்ப்பு நீதிமன்றத்திலும், நெடுமாறன், சரவணன், நடராஜன் மற்றும் அம்பேத்கர் ஆகியோர்கள் இதே போன்ற காசோலையை வைத்து சிவில் வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய அதே வழக்கறிஞர் தான் மேற்படி வழக்கையை நடத்தி வருகிறார் என்றும், எனக்கு விவரங்கள் தெரிந்தும் வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியும், மற்ற புகார்தாரர்கள் ஆகியோர்கள் சேர்ந்து நிதி நிறுவனம் நடத்தி வந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் எதிரியும் சீட்டு கட்டி வந்தேன் அதன் மூலம் அவருடன் தொடர்பு இருந்தது. சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு சீட்டு கட்டினேன். என்னுடன் சீட்டு கட்டிய மற்ற நபர்களை எனக்கு தெரியாது. மேற்படி சீட்டு குறித்த விவரத்தை அறிவிப்புலும் வழக்கிலும் சொல்லாததற்கு காரணம் உண்டா என்றால் இல்லை. நான் சீட்டு எடுத்தற்கு எதிரியிடம் காசோலைகள், பாண்டு பத்திரங்கள் மற்றும் ஆதார்கார்டு நகல் ஆகியவற்றை கொடுத்துள்ளேன். நான் கட்டிய சீட்டில் மொத்தம் 40 நபர்கள் பங்கு பெறுவார்கள். நான் கட்டியது தள்ளு சீட்டு. நான் நேரடியாக சென்று சீட்டில் பங்கு கொள்வதில்லை. எதிரி சீட்டு தொழில் எதுவும் நடத்தவில்லை என்றும், நான் அவரிடம் எந்த ஆவணமும் கொடுக்கவில்லை என்றும், தற்போது வழக்கிற்காக மேற்படி விவரங்களை குறித்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி திருப்பி கொடுக்காத ஆவணங்களை கேட்டு அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. எதிரி எந்த சீட்டு நிறுவனமும் நடத்த வில்லை என்றும் நாங்கள் அனைவரும் கூட்டாக நடத்தி வந்த நிதி நிறுவனத்தில் அவருடைய காசோலையை எடுத்துக்கொண்டு பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளளேன் என்றால் சரியல்ல. நான் தவறான வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Signature of Witness.